அரச துறையில் தொழில் நிலைபற்றிய மத்திய வங்கியின் ஆண்டு அளவையின்படி, அரசத் திணைக்களங்களில் தொழில்நிலை 1979இல் 33,713 இனால் அல்லது 5 சதவீதத்தினால் அதிகரித்துள்ளது. இவ் அதிகரிப்பில் 39 சதவீதம் கீழ்நிலை ஊழியர் தரங்களிலும், 29 சதவீதம் ஆசிரியத் தொழிலிலும் 24 சதவீதம் சிற்றூழியர் தரங்களிலும் இருந்தன. அரச சார்புள்ள நிறுவனங்களில் (அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சபைகளும்) தொழில்நிலை 89,385 அல்லது 14 சதவீதத்தால் அதிகரித்துள்ளது. இதில் 83 சதவீதம் சிற்றூழியர் தரங்களிலும் 14 சதவீதம் கீழ்நிலை ஊழியர் தரங்களிலும் இருந்தது. அரசதுறை பெருந்தோட்டங்களில் தொழில்நிலை 61,000 அல்லது 3 சதவீத குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு இருந்தது. அரச சார்புத்துறையில் தொழில் நிலை மூன்றில் இரண்டு பங்கு அதிகரிப்பு அரச பெருந்தோட்டங்களில் ஏற்பட்டுள்ளது.

நிறுவனமயமாக்கப்பட்ட தனியார் துறை தொழில் நிலையின் ஆண்டு மாற்றங்களை அளவிட பதிலீடாக பயன்படுத்தப்பட்ட ஊழியர் சேமநிதியத்திலுள்ள பணத் தொழிற்படும் கணக்குகளின் எண்ணிக்கை 1979இல் 102,479 ஆல் அல்லது 10 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என்பதைக் காட்டுகின்றது. நிதிக்குச் செலுத்து தொகையளிக்கும் அரச சார்பு நிறுவனங்களின் தொழிநிலை அதிகரிப்பைக் கழித்தால், 1979இல் தனியார் துறை தொழில் நிலையின் தேறிய அதிகரிப்பு 22,525 என மதிப்பிடலாம்.

முந்திய பந்தியில் தரப்பட்டுள்ள தரவு அரச திணைக்களங்கள், அரசுசார்பு நிறுவனங்கள், நிறுவனமயப்படுத்தப்பட்ட தனியார்துறை போன்றவற்றில் தொழில் நிலையின் அதிகரிப்பு 1978இன் 145,000 இற்கு எதிராக 1979இல் 136,000ஆக இருந்தது என்பதைக் காட்டுகிறது. எனினும் இவ் வெண்தொகை தரவு கிடைக்கப்பெறுமையால் நிறுவனச்சார்பற்ற துறை, உள்ளூர் வேளாண்மைத் துறை என்பவற்றில் தொழில் நிலையில் ஏற்பட்ட ஆக்கத்தை உள்ளடக்காது.

கிடைக்கப்பெறும் தரவு 1979இல் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பெருமளவு வேலை தேடிச்செல்லும் இலங்கையர்களின் வெளியேற்றத்தில் அதிகரிப்பு இருந்தது என்பதை குறிக்கிறது. பயிற்றப்பட்டோரின் வெளியேற்றம் உள்ளூரில் கிடைக்கப்பெறும் பயிற்றிப்பட்டோர்களின் எண்ணிக்கையில் குறைவினை ஏற்படுத்துமாதலால், கல்வித்துறை அதிகாரிகள் கல்லூரிகள் தரத்திலேயே பெரும் பயிற்சித் திட்டத்தை மேற்கொள்ளல் வேண்டும். இத்தகைய வேலைகளில் ஏனைய நாடுகளின் அனுபவம், வெளிநாடு சென்ற தொழிலாளர்கள் மீண்டும் வரும் பொழுது சமூக பொருளாதார பிரச்சினைகளை ஏற்படுத்தும் என்பதைக் காட்டியுள்ளது. எதிர்காலத்தில் இத்தொழிலாளர்களை உள்நாட்டில் உற்பத்தித்திறன் மிக்க தொழில்களில் மீள அமர்த்துவது பற்றி கூடிய கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

## வெளிநாட்டு வர்த்தகம்

இலங்கையின் வர்த்தக நிலுவை (சுங்கத்தரவுகளின்அடிப்படையில்) 1978ஆம் ஆண்டின் ரூ, 14,800 இலட்சம் (சி.எ உ. 1000இலட்சம்)கொண்ட குறையினைத் தொடர்ந்து 1979இல் ரூ 72,870 இலட்சம் (சி.எ.உ 3,620 இலட்சம்)கொண்ட குறையினைப் பதிவுசெய்தது. சில அரச முகவர் நிலையங்கள் ஏற்றுமதி இறக்குமதிகளைக் காலம் கடந்து பதிவு செய்வதால் இவற்றிற்கு ஏற்ப சுங்கத்தரவுகளைக்

சீராக்கம்செய்தபின்னரும் 1979ஆம் ஆண்டின் வர்த்தகக் குறைநிலை அதே அளவாகஇருந்தது, 1979ஆம் ஆண்டில் இலங்கைஎதிர்நோக்கியபாதகமான வர்த்தக நிலைநிச்சயம் கவலைக்குரியதொன்றாகும். ஆனால் இது உண்மையில் நாட்டின் நடுத்தரக்கால பொருளாதார உறுதிப்படுத்தல் திட்டத்திற்கு வெளிநாட்டு மூலங்களைப் பெறுவதற்கு வழிவகுத்தது. இறக்குமதிச் செலவினங்கள் 1978இன் ரூ. 146,870 இலட்சங்களிலிருந்து (சி, எ உ. 7,740 இலட்சம்) ரூ. 225,600 இலட்சங்களால் (சி. எ, உ. 11, 210 இலட்சம்) அல்லது 45 சதவீதத்தால் உயர்வடைந்தது. மறுபக்கத்தில் ஏற்றுமதி வருவாய்களில் மிகவும் குறைந்த அளவிலான அதிகரிப்பு அதாவது ரூ 132,060 இலட்சத்திலிருந்து (சி. எ. உ. 6,740 இலட்சங்கள்) அல்லது 152,730 இலட்சமாக (சிஎஉ 7,590 இலட்சங்கள்) 13 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது.

## அட்டவணை 1.17
## சென்மதி நிலுவை 1977 — 79

பத்து இலட்சம் ரூபா (சி. எ. உ. பதது இலட்சம் அடைப்புக்குறிக்குள்)

| வருடம் | இறக்குமதிகள் | | ஏற்றுமதிகள் | | சென்மதி நிலுவை | |
|---|---|---|---|---|---|---|
| | சுங்கம் | சரி செய்யப்பட்ட | சுங்கம் | சரி செய்யப்பட்ட | சுங்கம் | சரிசெய்யப்பட்ட |
| 1977 ... | 6,007 (630)[2] | 6,298 | 6,638 (659) | 6,570 | + 631 (+ 29) | + 272 |
| 1978 .. | 14,687 (774)[2] | 15,100 | 13,206 (674) | 13,193 | — 1,480 (— 100) | — 1,907 |
| 1979 ... | 22,560 (1,121) | 22,570 | 15,273 (759) | 15,282 | — 7,287 (— 362) | — 7,288 |

1 திருத்தப்பட்ட
2 1977 நவெம்பர் 15இற்குப் பின்னர், அந்நாளின் முன்னர் நிலவிய வீதங்களில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கட்காக செய்யப்பட்ட சீராக்கங்களை உள்ளடக்கும்.

மூலங்கள் : சுங்கம் இலங்கை;
உணவு ஆணையாளர் திணைக்களம்;
இலங்கை வளமாக்கி கூட்டுத்தாபனம்;
பெற்றோலிய கூட்டுத்தாபனம்;
இரத்தினக் கல் கூட்டுத்தாபனம்.

இறக்குமதிகளில் ஏற்பட்ட அதிகரிப்பு 1977ல் இருந்து இறக்குமதிக்கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் நேரடி விளைவாலாகும். இறக்குமதிகளின் அளவு இறக்குமதி அளவு சுட்டெண்களின் மூலம் அளவிடப்பட்டபடி (1978=100) 23சத வீதத்தால் உயர்வடைந்தது. இறக்குமதி விலைச்சுட்டெண்கள் மூலம் (1978=100)இறக்குமதி விலைகளை அளவிடுகையில் 52சதவீத அதிகரிப்பு காணப்பட்டது. மறுபக்கத்தில் ஏற்றுமதி நடவடிக்கைகள் ஓரளவு ஏமாற்றந்தரக் கூடியதாக அமைந்தது, ஏற்றுமதி அளவுக்குறிகாட்டி (1978—100)யின்படி அளவிடுகையில் ஏற்றுமதி அளவு ஒரு சத வீதத்துக்கும் குறைவாகவே அதிகரித்திருந்தது. எனினும் தேயிலை தவிர்ந்த ஏனையவற்றின் ஏற்றுமதி விலைகள் 1979இல் அதிகரித்துக் காணப்பட்டன. ஏற்றுமதி விலைச்சுட்டெண்(1978=100) 9 சதவீதங்கொண்ட உயர்வைக்காட்டியது.

1977ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வர்த்தக தாராளமாக்கல் உடனடியாக இறக்குமதியில் கணிசமானதொரு அதிகரிப்பினை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்பட்ட அதே வேளையில் நிரம்பலில் நெகிழ்ச்சியற்ற தன்மையின் காரணமாக அதன் ஆற்றற்பாடு குறைவாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது இது, வர்த்தகக் குறைவை மோசமாக்கலாம் என எதிர்பார்க்கப்பட்டது.

இந்நிலை 1978 இல் எதிர்பார்க்கப்பட்டவாறு நிகழவில்லை. இதற்குப் பெரும்பாலும்வர்த்தகர்கள் அவர்களின் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்தவேண்டியிருந்தமையால் இறக்குமதியாளர்களின் வர்த்தக ஈடுபாடு மெதுவாக நிகழ்ந்தமையே காரணமாக இருக்கலாம். ஆனால் 1979ஆம் ஆண்டில் எதிர்பார்த்த மாற்றம் காலங்கடந்து ஏற்பட்டது. வர்த்தக குறைநிலை நான்குமடங்கு கொண்ட அதிகரிப்பினைப்பதிவு செய்தது. உயர்ந்தவிலைகள் நிலவியபோதும் பொதுவான பொருளாதாரத் தன்மைகள் கணிசமான அளவில் அதிகரித்தமையால் மூலதன, இடைநிலை பொருட்களுக்கான கேள்வி அதிகரித்தது. மாறாக முக்கிய ஏற்றுமதிப்பொருட்களான தேயிலை, இறப்பர், தெங்குப் பொருட்கள் மற்றும் சிறுவேளாண்மைப் பயிர்கள் என்பவற்றின் அளவு, சாதகமற்ற காலநிலை, நிருவாகம், சந்தைப்படுத்தல் என்பவற்றில் காணப்பட்ட சிக்கல்கள் காரணமாக ஒழுங்கான உற்பத்திச் செயலாற்றம் இன்மையிலும் குறைவடைந்தது. தேயிலை விலைகளி ஏற்பட்ட வீழ்ச்சியுடன் 1977ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட செலாவணிச் சீர்திருத்தங்கள் மூலமான ஊக்குதற்காரணிகள் 1979 யூலை மாதத்தில் ஏற்றுமதி வரிக்குறைப்புக்கள் மூலம் தொடர்ந்தும் நிலைநாட்டப்பட்டன. செத்தெம்பரில் கையொப்பமிடப்பட்ட பன்னாட்டு தாங்கிருப்பு உடன்படிக்கையினைத் தொடர்ந்து எதிர்பார்க்கப்பட்ட இறப்பர் விலையில் ஏற்பட்ட அதிகரிப்புப் போக்கு மூலமும், இறப்பர் வர்த்தகத்தில் ஏற்பட்ட உறுதித்தன்மையாலும் இறப்பர் கைத்தொழில் நன்மையடைந்தது. தெங்குப் பொருட்களின் விலைகளும் இந்த ஆண்டு அதிகரித்துக் காணப்பட்டன. ஆனால் சில இறக்குமதிக்கட்டுப்பாடுகள் காரணமாக ஏற்றுமதிக்குக்கிடைத்த தெங்குப் பொருட்களின் அளவில் ஏற்பட்ட குறையினால் நாடு விலையதிகரிப்பின் முழுநலனையும் பெற முடியவில்லை.

**அட்டவணை 1.18**

**வெளிநாட்டு வர்த்தகம் 1970 – 1979**

| ஆண்டு | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | சுட்டெண்கள் (1978 = 100) | | | | வர்த்தக மாற்று விகிதம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | (அ) ஏற்றுமதிகள் க.ஏ.பெ. | இறக்குமதிகள் (கொ.கா.க) | வர்த்தக நிலுவை | அளவு | | விலைகள் | | |
| | | | | எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | எல்லா ஏற்றுமதிகளும் | எல்லா இறக்குமதிகளும் | |
| 1970 | 2,033 | 2,313 | —280 | 107 | 77 | 17 | 16 | 106 |
| 1971 | 1,947 | 1,986 | — 39 | 104 | 68 | 17 | 17 | 98 |
| 1972 | 2,009 | 2,064 | — 55 | 102 | 67 | 17 | 18 | 94 |
| 1973 | 2,617 | 2,715 | — 98 | 103 | 60 | 20 | 24 | 82 |
| 1974 | 3,471 | 4,554 | —1,082 | 89 | 42 | 31 | 42 | 72 |
| 1975 | 3,933 | 5,251 | —1,318 | 107 | 52 | 29 | 49 | 58 |
| 1976 | 4,815 | 4,645 | +170 | 102 | 57 | 34 | 44 | 78 |
| 1977 | 6,638 | 6,007 | +631 | 94 | 73 | 55 | 54 | 102 |
| 1978 | 13,206 | 14,687 | —1,480 | 100 | 100 | 100 | 100 | 100 |
| 1979 | 15,273 | 22,560 | 7,287 | 101 | 123 | 109 | 152 | 72 |

மூலங்கள்: இலங்கைச் சுங்கம், இலங்கை மத்திய வங்கி.

(அ) மீள ஏற்றுமதிகள் உட்பட.

**ஏற்றுமதிகள்**

1979ஆம் ஆண்டில் ஏற்றுமதி வருவாய்கள் ரூபா நியதிகளில் 16சத வீதம் அதிகரித்தன, சி. எ. உ. நியதிகளில் இவ்வதிகரிப்பு 3 சதவீதமாகக் காணப்பட்டு 1978 ஆம் ஆண்டினைவிட முன்னேற்டமடைந்து காணப்பட்டது. தேயிலை, இரத்தினக்கற்கள் என்பவற்றின் வருவாய்கள் வீழ்ச்சியடைந்தவிடத்து இறப்பர் தெங்குப்பொருட்கள். சிறுவேளாண்மை ஏற்றுமதிகள், பெற்ஜேனியம், கைத்தொழில் ஏற்றுமதிகள் என்பவற்றின் வருவாய்கள் அதிகரித்துக்காணப்பட்டன.

1979ஆம் ஆண்டில் தேயிலை ஏற்றுமதிகளின் அளவு ரூ. 57,220 இலட்சங்களாக விளங்கி 11சத வீத வீழ்ச்சியினைக்காட்டியது, (சி.எ.உ. நியதிகளில் 13 சத வீதம்) இது ஏற்றுமதி அளவு 3 சத வீதத்தாலும் விலைகள் 8 சதவீதத்தாலும் வீழ்ச்சியடைந்ததின் விளைவாலாகும். 1979ஆம் ஆண்டில் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் ஒரு கிலோவுக்கான சராசரி க. ஏ. பெ. விலை 1978இன் ரூ. 33.22 (சி. எ. உ. 1.70)க்கு எதிராக ரூ. 30. 51 (சி. எ. உ 1. 52) ஆக விளங்கியது. 1979இல் கொழும்பு ஏலங்களில் தேயிலையின் சராசரி விலை 14 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்துவிடத்து இலண்டன் ஏலத்தில் இலங்கைத் தேயிலையின் சராசரி விலைகள் 9 சத வீதத்தால் வீழ்ச்சியடைந்தன. யூலை மாதத்தில் தேயிலை ஏற்றுமதிகள்மீது விதிக்கப்பட்ட வரிகள் மூன்றில் ஒன்றாகக் குறைக்கப்பட்ட போது தேயிலைச்சபையின் வரி சிறிது அதிகரித்தது. மேலே கூறப்பட்டதுபோன்று வீழ்ச்சியடைந்துவரும் விலைகளாலும் அதிகரித்தவரியினாலும் ஏற்பட்ட திரவத்தன்மை இலாபக்கட்டுப்பாடு என்பவற்றினால் தேயிலைக்கைத்தொழில் பெருமளவில் பாதிக்கப்பட்டது. இப்பாரிய கைத்தொழில் தாராளமாக்கப்பட்டவர்த்தக அமைப்பில் விரும்பத்தக்க ஏற்றுமதி வளர்ச்சியை ஏற்படுத்தவேண்டுமாயின் பொருத்தமான வழிமுறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

றப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி (ரூபா நியதிகளில்) 1978ஆம் ஆண்டினைவிட 1979இல் 23 சதவீதத்தினால் குறிப்பிடத்தக்க அளவால் அதிகரித்தது. இவ்வதிகரிப்பு முற்றிலும் விலையில் ஏற்பட்ட 33 சதவீத அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும் ஏனெனில் இறப்பர் ஏற்றுமதி 7 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்திருந்தது. ஆண்டிறுதியில் கப்பலேற்றலிற்கு இருந்த இறப்பர் இருப்புக்கள் ஓரளவு அதிகமாகக் காணப்பட்டது. இதற்குச் சந்தையில் இருந்த நிலையற்றதன்மையும் போதியளவு கப்பலேற்றல் வசதிகள் இன்மையும் காரணமாக இருக்கலாம்.

தெங்குப் பொருள் ஏற்றுமதிகள் மூலமான வருவாய்களும் ரூபாய் நியதிகளும் 34 சதவீதத்தால்கணிசமானதாக அதிகரித்தது. இறப்பரில் ஏற்பட்டது போன்று 1979ஆம் ஆண்டில் தெங்குப் பொருட்களின் உற்பத்தியின் அதிகரிப்பிற்கு உலக விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பே முற்றிலும் காரணமாக அமைந்தன. 1979ஆம் ஆண்டில் தெங்கு உள்ளீட்டு உற்பத்திப்பொருட்களின் ஏற்றுமதி மூலம் பெறப்பட்ட மொத்தத்தொகையான ரூ. 16,990 இலட்சத்தில் ரூ. 12,980 இலட்சம் தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மூலமும் மிகுதி ரூ. 4,010 இலட்சம் ஏனைய உற்பத்திகள் மூலமும் பெறப்பட்டன.

DISCARDED

அட்டவணை 1.19

## ஏற்றுமதிகளின் உள்ளமைப்பு 1977–1979

| பாகுபாடு | பெறுமதி பத்து இலட்சம் ரூபாய்களில் சி.எ.உ இலட்சங்கள் (அடைப்புக் குறிக்குள்) | | | மொத்த ஏற்றுமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1977 | 1978 (ஆ) | 1979 | 1977 | 1978 (ஆ) | 1979 |
| 1. தேயிலை ... | 3,503 (355) | 6,401 (327) | 5,722 (284) | 53 | 48 | 37 |
| 2. இறப்பர் ... | 931 (93) | 2,021 (103) | 2,491 (124) | 14 | 15 | 16 |
| 3. தெங்கு ... | 496 (47) | 1,271 (65) | 1,699 (84) | 7 | 10 | 11 |
| 3.1. உள்ளீட்டு உற்பத்திகள் . | 335 (32) | 972 (50) | 1,298 (64) | 5 | 7 | 8 |
| 3.2. ஏனைய .. | 161 (15) | 299 (15) | 401 (20) | 2 | 2 | 3 |
| 4. சிறு வேளாண்மைப் பயிர்கள்(அ) .. | 340 (35) | 738 (38) | 851 (42) | 6 | 6 | 6 |
| 5. கைத்தொழில் ஏற்றுமதிகள்(அ) ... | 941 (88) | 1,940 (99) | 3,731 (185) | 14 | 15 | 24 |
| 5.1. புடவைகளும் ஆடைகளும் ... | 143 (13) | 481 (25) | 1,108 (55) | 2 | 4 | 7 |
| 5.2. பெற்ரோலியம் உற்பத்திகள் ... | 597 (56) | 945 (48) | 1,926 (96) | 9 | 7 | 13 |
| 5.3. ஏனைய ... | 200 (19) | 514 (26) | 697 (35) | 3 | 4 | 5 |
| 6. இரத்தின கற்கள் .. | 298 (30) | 531 (27) | 490 (24) | 4 | 4 | 3 |
| 7. ஏனையன .. | 129 (11) | 304 (16) | 289 (15) | 1 | 2 | 2 |
| மொத்த ஏற்றுமதிகள் | 6,638 (659) | 13,206 (674) | 15,273 (759) | 100 | 100 | 100 |

மூலம்: சுங்கம், இலங்கை

(அ) தெரிந்தெடுக்கப்பட்ட விடயங்கள் (மீளாமைவு செய்யப்பட்டவை)
(ஆ) மீளாய்வு செய்யப்பட்டவை

1979ஆம் ஆண்டில் சிறு வேளாண்மைப் பயிர்களின் ஏற்றுமதி வருவாய்கள் ரூ. 8,510 இலட்சமாக விளங்கி 15சதவீத அதிகரிப்பைக்காட்டியது. கறுவா கராம்பு, ஏலம், என்பன்வற்றின் ஏற்றுமதி அளவு குறுப்பிடத்தக்க அளவில் அதிகரித்த வேளை, மிளகு, கொக்கோ, பப்பாளிப்பால். எள்ளு எனபனவற்றில் வீழ்ச்சி காணப்பட்டது. பெற்ரோலிய ஏற்றுமதிகள், அவற்றின் (கப்பல் எரி பொருள் உட்பட) அளவில் ஏற்பட்ட சிறிதளவான அதிகரிப்பினலும் விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பினலும் ரூ. 19,260 இலட்சமாக விளங்கி இருமடங்கு அதிகரிப்பினைக் காட்டியது. இரத்தினக்கற்களின் ஏற்றுமதி வரிச்சலுகைகள் இருந்தபோதிலும் பெறுமதி நியதிகளில் 8 சத வீதத்தால் வீழ்ச்சியுற்றுக் காணப்பட்டது,. 1979 இல் கட்டுநாயக்கா கைத்தொழில் தயாரிப்பு அபிவிருத்தி வலய ஏற்றுமதிகளின் மொத்தப் பெறுமதி மட்டும் ரூ. 1, 150 இலட்சங்களாக விளங்கின. இதில் ஆடைகள் மூலம் மட்டும் ரூ. 1070 இலட்சம் பெறப்பட்டது. இலங்கையின் துணிவகை ஆடை என்பனவற்றின் ஏற்றுமதிகள் எதிர்பார்த்ததுபோல் 1978ஆம் ஆண்டின் ரூ. 4,810 இலட்சத்தில் இருந்து 1979ஆம் ஆண்டில் ரூ, 11,080 இலட்சமாக அல்லது 130 சதவீதத்தால் அதிகரித்தன.

## இறக்குமதிகள்

ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் 1977ஆம் ஆண்டில் இறக்குமதிச் செலவுகள் ரூபா நியதிகளில 54 சதவீதத்தாலும அல்லது சி எ உ நியதிகளில் 45 சதவீதத்தால் உயர்வடைந்தது. இறக்குமதிகளின் அளவு 23 சத வீதத்தாலும், இறக்குமதி விலைகள் 52 சதவீதத்தாலும் உயர்வடைந்தன. இறக்குமதிகளின் உட்பாய்ச்சல் 1979ஆம் ஆண்டின் கூடியவிரைவில் அதிகரித்தது. தாராளமாக்கலுக்கு முற்பட்ட காலப்பகுதியின் போக்குக்கு மாறாக முதலீட்டு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதி முக்கியத்துவம் பெற்றன. மொத்த இறக்குமதிகளில் முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதி 1978 ஆம் ஆண்டின் 23 சதவீதத்திலிருந்து 1979இல் 24 சதவீதமாக அதிகரித்தது. 1978 இல் 38 சதவீதமாக இருந்த இடைநிலைப் பொருட்களின் அதிகரிப்பு 1979 இல் மொத்த இறக்குமதியில் 41 சதவீதமாக இருந்தது. முதலீட்டு இடைநிலைப் பொருட்களின் இறக்குமதிகளில் காணப்பட்ட அதிகரிப்பில் ஒரு நன்கமைந்த போக்கினைக் காட்டியது. முதலீட்டுப் பொருட்களின் இறக்குமதிகளின் மொத்தப் பெறுமதியில் 53 சதவீதம் இயந்திரங்களும், கருவிகளும், 30 சதவீதம் போக்குவரத்துக் கருவிகளாகவும் 7 சதவீதம் கட்டடப் பொருட்களாகவும் காணப்பட்டன. கட்டடப் பொருட்களின் இறக்குமதிகள் ஒன்றரை மடங்காக உயர்வடைந்தன.

### அட்டவணை 1.20

### இறக்குமதிகள் மீதான செலவினங்கள் 1977—79

| வகுப்பு | பெறுமதி: பத்து இலட்சம் ரூபாய்களில் | | | பெறுமதி: சி. எ. உ. பத்து இலட்சம் | | | மொத்த இறக்குமதிகளின் சதவீதம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1977 | 1978 (அ) | 1979 | 1977 | 1978 (அ) | 1979 | 1977 | 1978 | 1979 |
| 1. நுகர்ச்சிப் பொருட்கள் ... | 2,534 | 5,618 | 7,824 | 270 | 287 | 389 | 42 | 38 | 35 |
| 1.1. உணவும், குடிவகைகளும் ... | 2,181 | 4,127 | 4,807 | 224 | 211 | 239 | 36 | 28 | 21 |
| 1.1.1. அரிசி ... | 917 | 689 | 884 | 94 | 35 | 44 | 15 | 5 | 4 |
| 1.1.2. மா ... | 925 | 2,192 | 1,691 | 96 | 112 | 84 | 15 | 15 | 8 |
| 1.1.3. சீனி ... | 197 | 620 | 929 | 19 | 32 | 46 | 3 | 4 | 4 |
| 1.2. புடவையும் துணிவகையும் | 120 | 531 | 1,536 | 15 | 27 | 76 | 3 | 4 | 7 |
| 1.3. ஏனைய ... | 203 | 959 | 1,481 | 31 | 49 | 74 | 3 | 7 | 7 |
| 2. நடுத்தரப் பொருட்கள் ... | 2,648 | 5,591 | 9,143 | 262 | 286 | 454 | 44 | 38 | 41 |
| 2.1. பெற்றோலியம் ... | 1,441 | 2.403 | 3,912 | 141 | 123 | 194 | 24 | 16 | 17 |
| 2.2. வளமாக்கி | 51 | 252 | 673 | 6 | 13 | 33 | 1 | 2 | 3 |
| 2.3. இரசாயனப் பொருட்கள் ... | 120 | 446 | 502 | 15 | 23 | 25 | 2 | 3 | 2 |
| 3. முதலீட்டப் பொருட்கள் ... | 746 | 3,367 | 5,459 | 73 | 172 | 271 | 12 | 23 | 24 |
| 3.1. இயந்திரங்களும் கருவிகளும் | 286 | 1,846 | 2,900 | 33 | 94 | 144 | 5 | 13 | 13 |
| 3.2. போக்குவரத்துக் கருவிகள் | 232 | 988 | 1,615 | 24 | 50 | 80 | 4 | 7 | 7 |
| 3.3. கட்டடப் பொருட்கள் ... | 129 | 150 | 368 | 9 | 8 | 18 | 2 | 1 | 2 |
| 4. பகுக்கப்படாதனவ .. | 79 | 110 | 134 | 25 | 30 | 7 | 1 | 1 | 1 |
| மொத்தம் .. | 600,7 | 14,687 | 22,560 | 630 | 774 | 1,121 | 100 | 100 | 100 |

மூலம்: இலங்கைச் சுங்கம்.

மொத்த இறக்குமதிப் பெறுமதியில் இடைநிலைப்பொருட்கள் மீதானசெல வினங்கள் 40 சதவீதத்துக்குச் சற்று மேலாக ரூ. 91,430 இலட்சமாக அமைந்து 1978 ஆம் ஆண்டினைவிட 64சதஇதங்கொண்ட அவீநரிப்பைக் காட்டியது. இவ் வதிகரிப்பில் மூன்றில் இரண்டு பங்கு, பெற்றோலியம் (43 சதவீதம்) வளமாக்கி (7 சதவீதம்) என்பவற்றின் அதிகரித்த விலைகளின் விளைவாகும்.

நுகர்வுப் பொருட்களின் பங்கு மொத்த இறக்குமதி 38 இல் இருந்து 35 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இவ் இறக்குமதிகள் 1979ஆம் ஆண்டில் ரூ. 22,060 இலட்சத்தால் அல்லது 39 சதவீதத்தால் அதிகரித்தது, உணவு குடிவகைகளின் இறக்குமதிகள் 61சதவீதமாக வீழ்ச்சியடைந்த விடத்து, ஆடைவகை இறக்குமதியின் 20சதவீதமாக விளங்கியது. ஏனையநுகர்வுப் பொருட்களின் இறக்கு மதிகள்54 சதவீதத்தால் அதிகரித்தன.

மொத்த இறக்குமதிப் பெறுமதியில் அரிசி, மா, சீனி என்பன 1978இன் 24 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1979இல் இவை 16சதவீதமாக காணப்பட் டன. ஆனால் இந்த மூன்று பொருட்களினதும் மொத்தச் செலவினைப் பார்க்கு மிடத்து சிறிதளவிலான அதிகரிப்புக் காணப்பட்டது. சீனியின் இறக்குமதிப் பெறுமதி 50 சதவீதத்தினால் அதிகரித்தவிடத்து மா இறக்குமதி 23 சதவீதத் தால் வீழ்ச்சியடைந்தது. அரிசி இறக்குமதிப் பெறுமதி இறக்குமதி அளவில் ஏற் பட்ட 13 சதவீத அதிகரிப்புடன் ரூ. 1,950 இலட்சம் அல்லது 28 சதவீதத்தினால் அதிகரித்தது. 1979ஆம் ஆண்டில் சீனி இறக்குமதி அளவில் 40 சதவீதங் கொண்ட அதிகரிப்புக் காணப்பட்டது.

வெளிநாட்டு வர்த்தகக் கொள்கை

1979ஆம் ஆண்டின் வர்த்தகக் கொள்கையின் முதன்மைபண்புகளாக ஏற்று மதி ஊக்குவிப்பு, வர்த்தகக் கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துதல், தீர்வை களைத் தொடர்ந்து மீளாய்தல் என்பவை விளங்கின. ஏற்றுமதி ஊக்குவிப்புக் கான கொள்கை நடவடிக்கைகள் நிறுவனங்களுக்கான உதவிகள், ஏற்றுமதிக்கு பண ஊக்குவிப்பு அத்துடன் சிறப்புமிகு ஏற்றுமதி ஊக்குவிப்பு, வலய அபி விருத்தி என்பவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கி இருந்தது.

அரசாங்க, தனியார் பிரிவுகளின் பிரதிநிதிகளையுள்ளடக்கிய இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச்சபை யூன் மாதத்தில் நிறுவப்பட்டது. இலங்கைக் குடி யருசுத்தலைவரின் தலைமையின் கீழான அமைச்சர்களைக் கொண்டஏற்றுமதி அபி விருத்திச்சபையின் முற்றான மேற்பார்வைக்கும், வழிகாட்டலுக்கும் அமைய இச்சபை இயங்கியது. இச்சபையே தேசிய ஏற்றுமதி அபிவிருத்திக்கொள்கைகள் திட்டங்கள், என்பவற்றினை உருவாக்குதல், கணித்தல், சேவற்படுத்தல் என்ப வற்றுக்குப் பொறுப்பானதாகும். இச்சபை அரசாங்கத்தின் ஒரு நடுமையமாகத் தொழிற்படும், இதனால் அரசாங்க வர்த்தக கைத்தொழில் முகவர் நிலையங்க ளின் ஒத்துழைப்புடன ஏற்றுமதியாளர் ஏற்றுமதி சம்பந்தமான பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்; ஏற்றுமதி உற்பத்தி அபிவிருத்திக்கு நிதி உதவி வழங் குவதற்கு ஒரு ஏற்றுமதி அபிவிருத்தி நிதி நிறுவப்பட்டது. ஏற்றுமதி ஊக்குவிப்பு நோக்கத்தைக் கொண்ட அடுத்த நிறுவனமாகிய இலங்கை ஏற்றுமதிக்கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் 1979 பெப்புருவரியில

நிறுவப்பட்டது இது ஏற்றுமதியாளர்களுக்கு கப்பலேற்றத்துக்கு முன்பும் பின்பும் தேவைப்படும் நிதியினைப் பெறுவதற்கும் ஏற்றுமதிக்கட்டளைகளை நடைமுறைப்படுத்த கடன்களை உறுதிப்படுத்தவும் உதவும். வர்த்தகம், வர்த்தகமல்லா ஆபத்துக்கள் காரணமாக வெளி நாட்டிலிருந்து தாமதமாகக் கிடைக்கும், அல்லது கிடைக்காமல்போகும் கொடுப்பனவுகளுக்கு வர்த்தக வங்கிகளின் உதவியோடு இக்கூட்டுத்தாபனம் காப்புறுதியினை வழங்கும்.

1979ஆம் ஆண்டில் ஏற்றுமதியாளர்கட்கு அரச இறைக்கொள்கைகளில் பல உந்துதல்கள் வழங்கப்பட்டன. உள்நாட்டு இறைச்சட்டத்தின்கீழ் ஏற்றுமதிகளையும் வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுகளைப் பெறும் பணிகளை மேற்கொள்ளும் நிறுவனங்கட்கு வரி விடுதலை, முதலீட்டுச்சலுகை, போன்றன வழங்கப்பட்டன உற்பத்தியாளர்களின் வரிவிதிப்புக்குட்பட்ட வருமானத்தில் இருந்து, இயந்திரங்களினது முழுப் பெறுமதி கட்டங்களினை அமைப்பதற்கான செலவில் அரைபங்கு, என்பவற்றை கழித்துக்கொள்ள வசதி செய்யப்பட்டது, ஏற்றுமதியும் வேறு உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கட்கு வரிவிடுதலை, விலக்குகள் என்பன வழங்கப்பட்டன. இலங்கைக்கு வெளியிலான ஏற்றுமதி ஊக்குவிப்பு சம்பந்தமான பிரயாணங்கள், விளம்பரங்கள் ஆகியவற்றுக்கான செலவுகளையும் வரிவிதிப்புக்கான வருமானத்திலிருந்து கழிக்கலாம். தயாரிக்கப்பட்ட அல்லது பதனிடப்பட்ட எந்த ஏற்றுமதிப்பொருளுக்கும் வியாபார மொத்த விற்பனை வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது, இவற்றைவிட தீர்வை மீளப்பெறும் திட்டம் ஒன்று நடைமுறையில இருந்தது. இதன் மூலம் ஏற்றுமதியாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்கள், கூறுகள் என்பவற்றின்மீது செலுத்திய சுங்கத்தீர்வையின்மீது ஒரு கழிவினை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யும்போது பெற்றுக்கொள்ளலாம்

இந்த ஆண்டில் இறக்குமதித்தீர்வைகள் பல மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டன. முதலீட்டுப்பொருட்களான. மண்வெட்டிகள், மீன்பிடி வலைகட்கான மிதப்புகள், எண்ணெய், பால் முதலியன கொண்டுசெல்லும் ஊர்திகள் என்பவை மீதான இறக்குமதித்தீர்வைகள் நீக்கப்பட்டவிடத்து லொறிகள். வான்கள் மீதான தீர்வைகள் 5 சதவீதமாகக் குறைக்கப்பட்டன. இரும்பு, உருக்குப் பொருட்கள் அலுமினிய பொருட்கள், வானொலி துலைக்கருவிகள் பட்டொளி விளக்குகள், தொலைக்காட்சி கருவிகள் போன்ற பல இடைநிலை பொருட்கள் மீதான இறக்குமதித்தீர்வைகளும் குறைச்கப்பட்டன, இருப்பினும் இயந்திரத்தால் மென்மைப்படுத்தப்பட்ட சுவர்களில் ஒட்டும் தாள்கள் கூட்டப்பட்டன. மோட்டார் சைக்கிள்கள் மீதான தீர்வைகள் நீக்கப்பட்டவிடத்து, தொலைக்காட்சிப்பெட்டிகள்மீதான தீர்வைகள் 50 சதவீதத்திலிருந்து $12\frac{1}{2}$ சதவீதமாகவும், வளி அடுப்புக்கள் மீதான வரி 50 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகவும் குறைக்கப்பட்டன. உள்ளூர் குளிர்சாதனப்பெட்டிகள் ஆழ்குளிரூட்டி என்பவற்றின் மீதான தீர்வைகள் 50 சதவீதத்திலிருந்து 75 சதவீதமாக அதிகரித்தவிடத்து, குளிர்சாதனக்கருவிகள் மீதான தீர்வை 50 சதவீதத்திலிருந்து 25 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

சவர்க்காரம், தீப்பெட்டிகள், தாள் புத்தகங்கள், சில உடைத்துணிகள் கண்ணாடிச்சிமினிகள் போன்ற சில நுகர்வுப் பொருட்கள் குறைந்த வீதத்தில் இறக்குமதிசெய்ய அனுமதிக்கப்பட்டன. அதே வேளையில் சிலவகைத்துணிகள், குடிவகை, இனிப்பூட்டப்பட்ட கட்டிப்பால், பதனிடப்பட்ட நீர்மங்கள் போன்றவற்றின் தீர்வைகள் உயர்த்தப்பட்டன.

ஏற்றுமதித்தீர்வைகளும் 1979இல் திருத்தியமைக்கப்பட்டன. தேயிலை மீதான ஏற்றுமதிவரி குறைக்கப்பட்டவிடத்து, தேயிலைச்சபையின் வரி அதிகரிக்கப்பட்டது. றப்பர் ஆராய்ச்சிவரி இருமடங்காக்கப்பட்டது. வேளாண்மை ஏற்றுமதித்தீர்வைகளைப் பொறுத்தவரையில் கறுவா தவிர்ந்த ஏனைய தீர்வைகள் யாவும் நீக்கப்பட்டன.

உள்நாட்டு வர்த்தக கொள்கை

தாராள வர்த்தகக்கொள்கையின்கீழ் விலைப்பொறிமுறை உற்பத்தியாளர்களுக்குத் தேவையான உந்துதல்களை வழங்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட அதே வேளையில் கட்டுப்பாடற்ற போட்டி நுகர்ச்சியாளர்க்கு நியாயமான விலையினை உறுதிப்படுத்துமெனவும் எதிர்பார்க்கப்பட்டது. இக்கொள்கைகளுக்கு மாறான எதுவித உள்ளார்ந்த முயற்சிகளும் இல்லாதபோதும், அரசின் சில தொழிற்பாடுகள் இத்தாராள வர்த்தகக் கொள்கையின் பெறுபேறுகளை வரையறுப்பதற்கு வழிசெய்தன,

ஏற்கனவே இருந்துவந்த விலைக்கட்டுப்பாடுகளுக்கான சட்டமுன்னேற்பாடுகள் சட்டத்தொகுப்பில் தொடர்ந்தும் இருந்தபோதும், சீனி, மா, பருப்பு, குழந்தைகள் பால் உணவு போன்ற அத்தியாவசிய பொருட்களைப் பொறுத்தவரையில் மட்டுமே உபயோகிக்கப்பட்டன், இந்த ஆண்டு காலப்பகுதியில் நுகர்ச்சியாளர் பாதுகாப்புச்சட்டம் உருவாக்கப்பட்டது, இது நியாயமான விலைப்பிரயோகத்தினை நிறுவுதல் போன்ற விடயங்கட்கான நுகர்வோர் சங்கங்களை ஏற்படுத்துவதற்கான நல்ல நடவடிக்கைகட்கு இடம்கொடுத்தது. அத்தோடு ஏதாவது பொருட்களையோ சேவைகளையோ தேசிய விலை ஆணைக்குழு மூலம் சட்டமாக்குவதற்கு குறிப்பிடுவதற்கும் இடமளிக்கப்பட்டது. அரசு உயர்ந்த அளவிலான முதலீடுகளை ஊக்குவித்தலையும் பெருமளவிலான போட்டியினையும் கொள்கையாக வெளியிட்டுள்ள நேரத்தில் இத்தகைய விலை ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் அவசியமற்றவையாகக் காணப்பட்டன.

முதன்மை அரச வர்த்தக நிறுவனம் தொடர்ந்தும் தனியார்துறையுடன் போட்டிபோட்டு இயங்கி வந்தது எனினும் புடவைகள், கருவாடு போன்ற உரிமச் சான்றிதழ்கட்குட்பட்ட பொருட்களின் வர்த்தகத்தில் இந்நிறுவனங்கள் அரசின் ஆதரவு பெற்ற பிரிவாக விளங்கின. இந்நிறுவனங்களின் பிரதானமான பங்கு வாழ்க்கைச் செலவினை குறைக்கும் முயற்சிகளில் முக்கியமாக குறைந்த வருமானப் பிரிவுகள், மற்றும் அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை நிலையாக வைத்திருப்பதற்கு அரசு உதவி செய்வதாகும்

வர்த்தகத்தினை மேலும் தாராளமாக்கும் அரசின் நோக்கம் சீனி இறக்குமதிக் கட்டுப்பாடு தளர்த்தப்பட்டதோடு தெளிவாகப்புலப்பட்டது. எனினும் அரசு இந்த ஆண்டுக்காலப்பகுதியில் சீனியின் விலைகளை நிலைப்படுத்தும் நோக்கத்தை வெளியிட்டமையால் சீனியின் தனியார் வர்த்தக இறக்குமதியினை எதிர்பார்க்கமுடியாது. தாராளமாக்கப்பட்டபோதும் சீனி, விலைக்கட்டுப்பாட்டிற்குட்பட்ட ஒரு பொருளாகவே தொடர்ந்தும் இருந்து வந்தது. பெரும்பாலும் இதுவே இறக்குமதித்திறனுடைய திறமை தனிப்பட்ட இறக்குமதியாளர்கள் இவ்வர்த்தகத்தில் ஈடுபடுவதைத் தடைசெய்தது. எனலாம், ஒரு பொருளின் இறக்குமதி தாராளமாக்கப்பட்ட பின்னர் அப்பொருளுக்கு விலைக் கட்டுப்பாடு இருத்தல் கூடாது.

நுகர்ச்சியாளர்களுடைய நன்மைகருதி அரசு எடுத்துக்கொண்ட கவனம் சில சமயங்களில் சூழ்நிலைக்கேற்ற முடிவுகள் எடுக்கப்பட்டதோடு, உள்நாட்டு உற்பத்திகளைப் பொறுத்தமட்டில் ஏற்படும் நீண்டகால பாதிப்புக்களைப்பற்றி அதிக கவனம் செலுத்தவில்லை. உதாரணமாக அரசாங்கத்தினுல் இறக்குமதி செய்யப்பட்டு மிகவும் குறைந்த விலையில் கோழி இறைச்சி விற்பனை செய்யப்பட்டமை, உள்நாட்டு கோழிப்பண்ணைக் கைத்தொழிலைப் பொறுத்தமட்டில் நிலையற்ற தன்மையை உருவாக்கிசந்தை ஊக்குவித்ததற்காரணிகளையும் குழப்பியது. இத்தகைய சடுதியான முடிவுகள் உள்நாட்டு உற்பத்தியாளர்களின் நீண்டகால முதலீட்டுத்தீர்மானங்களைப் பொறுத்தவரை பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும்.

விலைகளை உறுதிப்படுத்துவதற்காகவும், ஒழுங்கான நிரம்பலை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் மிளகாய். தீப்பெட்டி, பாலுணவுகள், உலர்ந்த புளிப்புச் சத்து, கொத்துமல்லி, மீன் போன்ற பல பொருட்களைப் பொறுத்தவரையில் தாங்கிருப்புத் திட்டம் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டிருந்தது மேலும் சில பொருட்களைப் பொறுத்தவரையிலும் இத்திட்டங்கள் நல்ல முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை, உதாரணமாக உலர்ந்த புளிப்புச்சத்தை இருப்பில் வைக்கும் திட்டம் விற்பனை செய்யப்படாத இருப்புக்கள் களஞ்சியங்களில் அடுக்கி வைக்கப்பட்டிருந்தலில் முடிவுற்றது. செத்தல்மிளகாயைப் பொறுத்தவரையில் இரு பிரதான நிறுவனங்களான கூ. மொ. வி. க்கும், சந்தைப்படுத்தல் திணைக்களத்திற்கும் இடையே சரியான இணைப்பு இருக்கவில்லை,

அரசின் வர்த்தகக் கொள்கைக்கு தாராளமாக்கப்பட்ட கொள்கை அமைப்புக்கேற்ப ஏற்ற பொருத்தமான மாற்றங்களை விரைவில் கொண்டு வருவது மிகவும் வேண்டியதொன்றும். வர்த்தகத்தில் இத்துறை பெருமளவில் ஈடுபட வேண்டுமாயின் இம்மாற்றங்கள் அரசதுறை வர்த்தகத்தில் பெரும் போட்டியையும் திறமையையும் கொண்டுவரவேண்டும். உள்ளூர் உற்பத்தியாளர்கட்கு நீண்டகால தீர்வைக் கொள்கை மூலம் மேலதிக பாதுகாப்பும் ஊக்குவித்தல்களும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அடிக்கடி தீர்வைகளில் மாற்றங்கள் செய்வது நிலையற்ற தன்மையை உருவாக்குவதுடன் நீண்டகால வர்த்தக முடிவுகளை எடுப்பதில் இக்கட்டான நிலையினை ஏற்படுத்தியது. பொருட்களின் விலைகள் நிர்ணயிப்பதில் அரச வர்த்தக நிறுவனங்கள் தயாரிப்பாளர்களின் ஊக்குவித்தற் காரணிகட்கு கூடிய முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் தாங்கிருப்பு நிதித்திட்டத்தின்கீழ் நிர்வாகம் மிகவும் கவனமாக செயல்படவேண்டும். அதாவது முக்கியமாக உள்நாட்டு உற்பத்திகளான துணை உணவுப்பொருட்களான செத்தல் மிளகாய், வெங்காயம் உருளைகிழங்கு என்பவற்றின் அளவுக்கு மீறிய இருப்புக்களைச் சேகரிப்பதைத் தவிர்க்கவும் சந்தைக்கு அளவுக்குமீறி பொருட்களை வழங்காமல் இருக்கவும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## சென்மதி நிலுவை[1]

1979 ஆம் ஆண்டின் சென்மதி நிலுவை நடவடிக்கைகள், பெரும்பாலும் 1977ஆம் ஆண்டின் பொருளாதார சீர்திருத்தங்களின் விளைவுகளாகும். இறக்கு

1. சென்மதி நிலுவைகளில் உபயோகிக்கப்பட்ட வர்த்தகத்தரவு இந்த ஆண்டுப்பகுதியின் உண்மைப்பெறுகைக் கொடுப்பனவுகள் ஆகும். இவை முன்னர் கொடுக்கப்பட்ட வெளிநாட்டு வர்த்தகத்தரவுகளிலிருந்து வேறுபடும். இவை ஏற்றுமதிகள் இறக்குமதிகளின் இயல்பான அசைவுகளைப் பிரதிபலிக்கின்றன. இவ்வேறுபாடுகள் ஒரு பக்கத்தில் பெறுகை, கொடுப்பனவு இரண்டுக்கும் இடையேயுள்ள இடைவெளி காரணமாகவும் மறுபக்கத்தில் பொருட்களின் இயல்பான அசைவுகள் காரணமாகவும் ஆகும்.